# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

**அ.வ.எண்.** 97/2009

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுந்தரராஜன் | மதம் | : இந்து |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 47 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**30.09.2024**

**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

1. 06.09.1989 தேதியிட்டு சாலம்மாள் வகையறாவிடம் இருந்து என் அப்பா கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். (**கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பட்டா எண்.761 என் அப்பா பெயரில் உள்ள பட்டா அசல் தாக்கல் செய்கிறேன். (**பட்டா பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 07.05.2009ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். (**வரி ரசீது பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பட்டா எண்.761 என் அப்பா, அம்மா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**பட்டா பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பட்டா எண்.1917ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**பட்டா பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பட்டா எண்.1917 என் தம்பி பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**பட்டா பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)